நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.649 of 2024

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வசந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்புசாமி |
| கிராமம் | : | ஓமலூாா் |
| வட்டம் | : | ஓமலூாா் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW4 |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், மே மாதம், 13–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.46 a.m. )

1. நான் தற்போது ஓமலூர் மாரியம்மன்கோயில் தெருவில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் என்னுடைய அண்ணன் மற்றும்

அரவது மகன் ஆவார். என்னுடைய அண்ணன் ஜீவானந்தம் என்னிடம் ரூ.25 லட்சம் கடனாக வாங்கியிருந்தார். அந்த பணத்தை கேட்பதற்காக நானும் எனது மகள் சுருதிகாவுடன் 2021 ம் வருடம் 7 மாதம் என்னுடைய அண்ணன் வீட்டிற்கு சென்று இருந்தோம்.

2. நாங்கள் அண்ணன் வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்த உதயபாரதி எங்களை தேவடியா, கண்டரா ஒலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி எங்கடி பணம் வாங்க போகிறீர்கள் என்று சொல்லி எனது மகளை துப்பட்டாவை பிடித்து இழுத்து தலை முடியை பிடித்து இழுத்தும் மற்றும் பெல்ட்டால் வலது கை மற்றும் முதுகு தோளில் அடித்தார். எதிரி உதயபாரதி என்னுடைய சேலையை பிடித்து உருவினார். ஹாக்கி மட்டையால் என்னுடைய வலது கை மோதிர விரலில் அடித்து உடைத்துவிட்டார். என்னுடைய செல்போனை உதயபாரதி உடைத்துவிட்டார். எதிரி நிர்மலா சிமெண்ணை கேனை கொண்டு வந்து கொடுத்து இவர்களை எறித்து விடுங்கள் என்று சொன்னார். அருகில் இருந்தவர்கள் சத்தம் கேட்டு வந்தார்கள். சம்பவம் இடத்திற்கு போலீசார் வந்தார்கள். நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். போலீசார் வந்து என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரி உதயபாரதி இந்நீதிமன்றத்தில் உள்ளார். மற்றொரு எதிரி என்னுடைய அண்ணன் பழ.ஜீவானந்தம் ஆவார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.05 p.m.,

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.649 of 2024

## P.W. 2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுருதிகா |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்புசாமி |
| கிராமம் | : | ஓமலூார் |
| வட்டம் | : | ஓமலூார் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 21 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், மே மாதம், 13–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1ம் எதிரி ஆஜர் 2ம் எதிரி ஆஜர் இல்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.05 p.m. )

1. நான் தற்போது ஓமலூர் மாரியம்மன்கோயில் தெருவில் குடியிருக்கிறேன். போட்டி தேர்வுக்கு படித்து வருகிறேன். எதிரிகள் என்னுடைய மாமா மற்றும்

மாமா மகன் ஆவார். என்னுடைய மாமா ஜீவானந்தம் என் அம்மாவிடம் ரூ.25 லட்சம் கடனாக வாங்கியிருந்தார். அந்த பணத்தை கேட்பதற்காக நானும் எனது அம்மாவும் 2021 ம் வருடம் 7 மாதம் 9 ம் தேதி என்னுடைய மாமா வீட்டிற்கு சென்று இருந்தோம்.

2. நாங்கள் மாமா வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்த உதயபாரதி எங்களை தேவடியா, கண்டரா ஒலி என்று கெட்ட வார்த்தையால் திட்டி எங்கடி பணம் வாங்க போகிறீர்கள் என்று சொல்லி என்னுடைய துப்பட்டாவை பிடித்து இழுத்து தலை முடியை பிடித்து இழுத்தும் மற்றும் பெல்ட்டால் வலது கை மற்றும் முதுகில் அடித்தார். எதிரி நிர்மலா சிமெண்ணை கேனை கொண்டு வந்து கொடுத்து இவர்களை எறித்து விடுங்கள் என்று கொலை மிரட்டல் விடுத்தார். அ.சா.1 ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.10 p.m.,

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**